ஆதாரக்கல்வி

கல்வி 7. செப்டம்பர், அக்டோபர் 1954 கலைகள் 5 & 6

பொருளடக்கம்

பக்கம்

1. காந்திஜி பேசுகிறார் —தலையங்கம்
2. ஆட்சியற்ற சமுதாயமும், ஆதாரக் கல்வியும் —தீரேந்திர மஜும்தார் 3
3. பெருங் கவிஞர் மறைவு 5
4. கிராமப் பிரதேசங்களில் 1270 பள்ளிக்கூடங்கள் 7
5. ஜெகத்தின் ஜோதி —நாமக்கல் ரா. பாலசுப்பிரமணியன் 8
6. அகற்றுவார்களா? —இர. மு. பெ. பச்சையப்பன் 9
7. உபநிஷதச் சிறு கதைகள் —"ஆசி" 13
8. கவிமணியின் வாழ்க்கை வரலாறு 18
9. கலையின் சிறப்பு —மதுரை இருள்மணி 19
10. அமரக்கவி — சி. பி. ராயன் 20
11. ஆசிரியர் சாசனம் 23
12. கவிமணி —புத்தனேரி. ரா. சுப்பிரமணியன் அட்டை 2
13. விவசாயக் கல்வி அட்டை 4

ஆண்டு சந்தா 3-0-0

★

தனிப் பிரதி 0-4-0

★

ஆதாரக்கல்வி காரியாலயம்

87, ஆச்சாரப்பன் தெரு, சென்னை-1

கவிமணி

புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்

1 கருவூலக் கண்மணியே! காலன் உனைக்
கவர்ந்தானோ? இல்லை! இல்லை!!
சருகாகித் தளர்ந்திட்ட சடலந்தான்
நீங்கியது! தாயின் உள்ளப்
பரிவோடு வழங்கியவுன் பாலமுதக்
கவிமணியில் பரந் தொலிக்கும்
பெருநாதம் தமிழ்க்குரலில் பின்னியதால்
இறப்பில்லாப் பேறுற் றாயே!

2 துள்ளு நடை போட்டுவரும் சொற்களிலே
தமிழின்பம் தோயக் கண்டோம்!
வெள்ளமெனப் பொங்கிவரும் கருத்தினிலே
உள்ளமெலாம் மிதக்கக் கண்டோம்!
தெள்ளுதமிழ்க் கவிமணியே! சிந்தையெனும்
சோலையிலே சிரித்துப் பூத்த
கள்ளவிழும் 'மலர்மாலை' காலமெலாம்
கவிமணமே கமழ்வ தன்றோ?

3 புத்தரது கருணையினைப் புத்த முதப்
பாட்டாகப் பொழிந்து காதல்
பித்தமது பிறந்தகதை இத்தன்மைத்
தென்றழகாய்ப் பிழிந்த நல்லோய்!
சத்தான கீர்த்தனையால் தமிழிசையின்
தரமோங்கித் தழைக்கச் செய்தோய்!
புத்தேரிக் கவிமணியே! பொதிகைமலைத்
தென்றலெனப் புகழ்பெற்றாயே!

4 அருவியெனப் பொங்கிவரும் கவிவேகம்
இருக்கட்டும்! இலக்கி யத்தைத்
துருவிமிகப் பார்க்கின்ற துடிப்பதுவும்
இருக்கட்டும்! சோம்ப லின்றித்
தருகின்ற மணிமொழிகள் இருக்கட்டும்
அன்பான தாத்தா! உன்றன்
மருவில்லா மனப்பண்பே போதாதோ
வையமெலாம் வணங்கு தற்கே!

ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 7 | ஜய, புரட்டாசி— செப்டம்பர் அக்டோபர் 1954 | கலைகள் 5 & 6



காந்திஜி பேசுகிறார்

கடவுள் உண்மை: "கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை நிரூபிக்க முடியாது; நிரூபிக்கத் தேவையும் இல்லை. கடவுள் ஒருவர் உண்டு; அவர் இருக்கிறார் என்பதை உணரா விட்டால் அதனால் நமக்குத்தான் கேடு. கடவுளைப் பற்றிய உணர்ச்சியே இல்லாதிருப்பது பிணிவாய்ப்பட்ட நிலைபோன்றது; விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இந்தப் பிணியிலிருந்து ஒரு நாள் நாம் விடுபடுவோம் என்பது நிச்சயம்."

நம்பிக்கையும் வழிபாடும்: "நம்பிக்கையும் வழிபாடும் இல்லாது செய்கிற வேலைகள் வாசனையில்லாத செயற்கைப் பூவை ஒக்கும். அறிவை அவித்துவிடவேண்டும் என்று நான் சொல்லவில்லை; நமமுள்ளே குடிகொண்டிருந்து அந்த அறிவையே தூய்மைப் படுத்துகிற ஒரு பொருளை உரிய முறையில் அங்கீகரிக்க வேண்டும் என்றே சொல்கிறேன்."

"மனிதனுடைய மனதில் இருளுக்கும் ஒளிக்குமிடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடந்து வருகிறது. வழிபாடு என்ற சிறந்த பாதுகாப்பை நம்பாதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமையாகி விடுவான்."

மாணவரும் அரசியலும்: "நேரடியாக அரசியலில் கலந்துகொண்டு ஆதிக்கம் பெறுவதென்பது மாணவருலகத்துக்குத் தேரிய வேண்டுவதேயில்லை. இந்தமாதிரி வேலையில் அவர்கள் தங்கள்

கைத்திறத்தைக் காட்ட ஆரம்பித்தவுடனேயே அவர்கள் மாணவர்கள் என்ற நிலையிலிருந்து மாறி விடுகிறார்கள். இதனால் நாட்டில் ஒரு நெருக்கடி நேரும்போது அவர்கள் நாட்டுக்குச் சேவைசெய்ய முடியாமற்போகிறது."

"சமய உணர்ச்சி இந்தியாவில் அறவே ஒழிந்து விடாமல் இருக்க வேண்டுமென்றால் இந்திய இளைஞர்களுக்கு உலகியல் சம்பந்தமான, கல்வியளிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு சமய சம்பந்தமான கல்வி பயிற்றுவதும் அவசியமாகும்."

எனது மதம்: "என்னுடைய மதத்துக்கு பூகோள வரையறை கிடையாது. அதனிடம் எனக்கு நம்பிக்கை இருக்கும் என்றால், அது இந்தியாவின் மீதுள்ள என் அன்பையும் கூடத்தாண்டி அப்பால் நிற்கும். அஹிம்சை என்ற மதத்தின் மூலமாக இந்தியாவுக்குப் பணி புரிய என் வாழ்க்கை அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது."

கல்வி: "மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல அல்லது ஸ்தூல உடலும் அல்ல. உணர்ச்சி மட்டுமோ? அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால்தான் மனிதன் ஆகிறான்."

"புத்தகங்களிலிருந்து ஒழுக்கம் என்பதைப் பிரின்ஸிபால் அவர்களோ அல்லது பேராசிரியர்களோ எடுத்து தந்துவிட முடியாது. ஒழுக்கத்தை அமைத்துக் கொள்வது உங்கள் வாழ்க்கையிலேயே அமைந்து கிடக்கிறது. ஏன்! உங்களுக்குள்ளேயே அது அமைந்து கிடப்பதாகச் சொல்லிவிடலாம்."

பண்பாடு: "நமது காலத்தில் இந்தியப் பண்பாடு உருவாகிக் கொண்டு வருகிறது. இன்று ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கும் பண்பாடுகளை நம்மில் அநேகர் ஒன்று சேர்த்து, ஐக்கியப்படுத்தி, ஒரு பண்பாடாகச் செய்ய முயன்று வருகிறார்கள். அடியோடு ஒதுங்கி நிற்கும் எந்தப் பண்பாடும், நீடித்த காலம் நிலைத்து இருக்காது."

கீதையே நமது அன்னை: "கீதையே அகிலத்துக்கும் அன்னை. எவரையும் அவள் புறக்கணிப்பதில்லை. அவள் வீட்டு வாயில் திறந்தே இருக்கிறது. விரும்புவோர் யாரும் தாராளமாக உள்ளே போகலாம். கீதையில் உண்மையான பக்தியுடையவர் எவருக்கும் ஏமாற்றம் என்பதே இன்னதென்று தெரியாது. அவர்கள் அறிவின் எல்லையைக் கடந்துள்ள நிரந்தரமான ஓர் ஆனந்தத்தையும், சாந்தியையும் எப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சியற்ற சமுதாயமும், ஆதாரக் கல்வியும்

தீரேந்திர மஜும்தார், அக்கிராசனர், சர்வ சேவா சங்கம்

காந்திஜி உலகத்திற்கு அஹிம்ஸையின் செய்தியைக் கொடுத்தார். இதன் காரணமாக அவரை ஒரு யுக புருஷர் என்று அழைக்கிறோம். ஆனால் காந்திஜி அஹிம்சையைப் பற்றி ஏதாவது புதிய செய்தி அறிவித்தாரா? மஹாவீரர், புத்தர், ஏசுநாதர் முதலிய அநேக மகான்கள் இந்த அஹிம்ஸையின் செய்தியை அறிவித்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால் காந்திஜி என்ன புதிய உண்மையை வெளியிட்டார்?

மகாத்மா காந்தி "அஹிம்சா பரமோதர்ம" என்ற மந்திரத்தை மட்டிலும் சொல்லவில்லை. அவர் இந்த அஹிம்ஸையின் மூலமாக ஒரு பெரிய புரட்சியையே நடத்தினர்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாகப் பெரிய இயந்திரத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு உலகத்தில் ஏகாதிபத்தியம், யுத்தம் தோன்றிய பொழுது காந்திஜி அவதரித்தார். விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏகாதிபத்திய யுத்த வெறியும், யுத்தத்தினால் விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் தோன்றி அதன் மூலம் பயங்கர யுத்தம் என்ற ஒரு சுழலில் உலகம் சுழன்றுகொண்டிருந்தது. மனித சமூகம் தன் பலாத்கார வெறியை வளர்ப்பதற்கு விஞ்ஞானத்தை நம்பியிருந்து, அதன் மூலம் மனித சமூகமே நிர்மூலமடையும் சூழ்நிலையில் இருக்கிறது. பயங்கரமான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படுவதால் மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஒரு உபாயம் தேடும் பிரச்னையில் இருக்கிறார்கள். ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வது இயற்கையே. ஆகையால் மனிதன் அந்த பயங்கர சூழ்நிலையிலிருந்து தன்னைவிடுவித்துக் கொள்ள உபாயத்தை ஆராய்கிறான். இந்த விஞ்ஞானமும், ஹிம்சையும் இரண்டும் சேர்ந்து இருப்பது முடியாது என்பதை உணர்கிறான். முற்காலத்தில் "அஹிம்சா பரமோ தர்ம" என்று உபதேசித்ததுடன், தர்ம யுத்தத்தில் உயிரை இழப்பது சிறந்தது என்று கருதப்பட்டு வந்தது. ஏனெனில் யுத்தம் என்பது முன் காலத்தில் அவ்வளவு பயங்கரமானது அல்ல. இத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சிகள் அக்காலத்தில் இல்லாததால், யுத்தம் என்பது அதில் ஈடுபட்டிருக்கும் போர்வீரர்கள் சம்பந்தப்பட்டதாக மட்டிலும் இருந்தது ஆகையால் குறைந்த அளவு ஹிம்சையினால் ஒரு சமூகம் நன்மை பெறுமானால் பரவாயில்லை என்று கருதி வந்தார்கள். ஆனால் இன்றுள்ள சூழ்நிலை வேறு. இன்று சமூகத்தில் இருக்கும் அக்கிரமத்தை ஒழிப்பதற்கு பலாத்காரம் உபயோகிக்கப்பட்டால், அது உடனே விஞ்ஞான ஆராய்ச்சியின் உதவியால் மிகவும் பயங்கரமாகி ஜனசமூக முழுமையையுமே அழித்து, யாரையும் பிழைத்திருக்க வைக்காது.

ஆனால் மனிதன் ஆதிகாலம் முதல் ஹிம்சையிலேயே பழகி வந்துள்ளபடியால், இப்பொழுது அந்த ஹிம்சையிலிருந்து வெளியேற வழி தோன்றாமல் சிக்கிக் கொண்டிருக்கிறான். அந்தச் சிக்கலிலிருந்து எப்படி வெளியேற்றுவது? சுயபுத்தி அடைவதற்கு சமூக அமைப்பில் அடிப்படை மாறுதல் செய்ய வேண்டும். உலகத்தில் மனிதனும் இயற்கையும் இரண்டும் ஒன்றுசேர்ந்து தான் ஒரு வேலை செய்ய முடியும். ஆகையால் மனித சமூகம் தன்னுள்

இருக்கும் ஹிம்சை வழியைக் கைவிட்டு விட்டு புதிய பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

சமூக சாஸ்திரத்தைச் சாதாரணமாக அறிந்த மாணவர்கள் கூட அரசாட்சி, சுரண்டல் என்ற இரண்டிலிருந்துதான் இந்த ஹிம்சை பிறந்தது என்று கூறுவார்கள், ஆகையால் சமூகத்தில் அரசியல் முறையும், சுரண்டல் முறையும் இருக்கும் வரையிலும் ஹிம்சையிலிருந்து விடுபட முடியாது. ஆகையால் அஹிம்சா பூர்வமான சமூகத்தை அமைப்பதற்கு உலகம் அரசாட்சியற்றதாகவும், சுரண்டலற்றதாகவும், வர்க்க பேதமற்றதாகவும் இருக்க வேண்டும். அரசாட்சியில்லாததால் சமூகம் அழிந்துபோகாமல் இருப்பதற்கு சமூகத்தை நல்ல முறையில் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

சமூகத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு ஏதாவது ஒரு சக்தி அவசியம் இருக்க வேண்டும், ஆனல் இந்த ஏற்பாடு இன்று தண்டிக்கும் சக்தியின் உதவியால் நடைபெறுகிறது. ஆனல் இந்த தண்டிக்கும் சக்தியை யார் உற்பத்தி செய்தது? இது தானகவே உற்பத்தியாகிவிடவில்லை. தன் சமூக அமைப்பின் மூலமாக மனிதன்தான் இதை உற்பத்தி செய்தான். இந்த சக்தியை மனித சக்திதான் உற்பத்தி செய்தபோதிலும் இந்த தண்டிக்கும் சக்தி தன் தாயையே அடக்கி, எஜமானகை அமர்ந்து விட்டது. மனித சமூகத்திற்கு எவ்வித சுதந்திரமும் இல்லாமல் அடக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் அரசாட்சியற்ற அமைப்பை ஏற்படுத்த விரும்பினல் இந்த தண்டிக்கும் சக்தியை விரட்டவேண்டும். சமூகம் தன்னை நிர்வகித்துக்கொள்ள நன்முறையில் அமைத்துக் கொண்ட பிறகுதான் இதை ஏற்படுத்த முடியும்.

ஆகையால் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் வர்க்கபேதமற்ற பூரண ஒத்துழைப்புடன் தங்கள் வேலைகளைச் செய்துவர வேண்டும்.

இன்று சமூகம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. நிர்வாகம் என்ற பெயரில் ஒரு சிறிய பிரிவும் இருக்கிறது. உற்பத்தியாளர்கள் என்ற ஒரு பெரிய உழைப்பாளிகளின் பிரிவும் இருக்கிறது. சிறிய அளவில் உள்ள இந்த நிர்வாகம் என்ற பிரிவுதான் "நிர்வகிக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு இந்த உழைப்பாளிகளைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது. சமூகத்தில் சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் என்ற இரு பிரிவுகளை வைத்துக் கொண்டு, "ஒத்துழைப்பு சமூகத்தை அமைக்கிறேன்" என்று முயற்சிப்பது கனவு காண்பதாகும். இந்த இரு பிரிவுகளுக்கும் எப்படி ஒத்துழைப்பு ஏற்படும்?

ஆகையால் முதன் முதலில் சுரண்டலுக்கு ஆதாரமாக உள்ள இந்த வர்க்க பேதத்தை ஒழிக்க வேண்டும். இவ்விதமாக சுரண்டல், அரசாட்சி என்ற இரண்டையும் ஒழிக்காவிடில் நம் அபிலாஷை நிறைவேருது. இந்த இரண்டும் அமைந்திருக்கும் நிலையைக்கொண்டு பார்க்குங்கால், சமூகத்தின் தீய சக்திகளை ஆணிவேருடன் களைந்து எறியாவிடில் மனித சமூகம் முன்னேற முடியாது. இதற்கு ஒரு பெரிய புரட்சி நடத்தவேண்டும். அதாவது புதிய சமூகம், புதிய மனிதன்—தோன்றுவதற்குப் புரட்சிகரமான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நோக்கத்துடனேதான் காந்திஜி தம் கடைசி நாட்களில் புதிய

பெருங் கவிஞர் மறைவு

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை புகழுடல் எய்தி விட்டார். பாரதி வழிவந்த புலவர். மறுமலர்ச்சிக் கவிஞர். பழமையில் வேரூன்றி புதுமை பூத்துக்காய்த்த நல்லறிஞர். அடக்கமும், அன்பும் நிறைந்த சாந்த நிதியம். பரந்த நோக்கமும் ஆழ்ந்த உள்ளறிவும் படைத்த பெரியோன். தமது தீங்கனிக் கவிதைகளால் மட்டுமின்றி குணஜோதியாக ஒளிவீசியும் தமிழகத்தைப் பெருமைப் படுத்திய செம்மல். பாரதியுடன் சேர்த்து ஒப்பிடக்கூடிய கவி ஹ்ருதயம் படைத்தவர். அவர் புனைந்த பாக்கள் எண்ணற்றவை. வரைந்த கட்டுரைகள் பல பல உண்டு. சரித்திர, சிலாசாஸனத் துறைகளில் ஆராய்ச்சி மிக நடத்திய அரிய உரைகளை ஆங்கிலத்திலும் வழங்கியுள்ளார். வாழ்நாளில் பெரும்பகுதியை "தே. வி." பள்ளியாசிரியராகக் கழித்தவர். எனவே குழந்தையைத் தெய்வமெனக் கொண்டாடி இனிய நல்வழிப்பாக்களை அன்பு கூர்ந்து அருளினார். அவை "குழந்தைச் செல்வம்" என்று தொகுக்கப் பெற்றுள்ளன. ஒளவையின் சொற் செட்டும் புது உலகின் நவமணமும் அவற்றில் திரண்டு காண்கின்றன.

சமூக அமைப்பு ஏற்படுத்துவதை வன்மையாக வற்புறுத்தினார். அதன் பொருட்டே அவர் கல்வியில் அஹிம்சைப் புரட்சியைத் தோற்றுவித்தார். மனிதனின் மலர்ச்சிக்குக் கல்விதான் இன்றியமையாதது. இதன் காரணமாகவே பெரிய மகான்கள் தாங்கள் கற்பனை செய்யும் சமூக அமைப்பை ஏற்படுத்தக் கல்வி முறையில் மாறுதல் செய்துவந்தனர்.

வர்க்கபேதமற்ற சமூகத்தை அமைப்பதற்குமுன் சமூகம் சுய தேவைப் பூர்த்தியுள்ளதாக இருக்க வேண்டும். இது எவ்விதம் சாத்தியமாகும்? இன்று மக்களில் பெரும்பான்மையோர் கல்வியற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் படித்தவர்களின் உதவிகொண்டுதான் முன்னேற வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒவ்வொருவரும் கல்விபெற்றிருக்க வேண்டும். அதன்பின் தான் தங்களை அவர்கள் நிர்வகித்துக் கொள்ள முடியும். இதனாலேதான் காந்திஜி கல்வி முறையில் இந்தப் புதிய அடிப்படைக் கல்வி முறையினால் மாறுதல் செய்தார். அவர் உற்பத்தி முறையையும் சமூகச் சூழ்நிலையையும் கல்வியின் பாடத்திட்டமாக அமைத்தார். இன்று சரீர உழைப்பில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலோர் கல்வியறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி புகட்ட முற்பட்டால் உற்பத்தியே நின்றுவிடும். ஆகையால் சரீர உழைப்புடன் கல்வியைப் பிணைத்தார். நிர்வாகிகளாக இருக்கும் பிரிவினரை உழைப்பாளிகளாக மாற்றப் பயிற்சியளிக்கும் முறையே இந்த ஆதாரக்கல்வி. அப்போது படித்தவர்கள் எல்லோரும் உழைப்பாளராகி இந்த வர்க்கபேதமே ஒழிந்துவிடும்.

ஆனால் இதனால் மட்டும் சுயதேவைப் பூர்த்தி வந்துவிடாது. குழந்தைப் பருவம் முதல் சமூகப் பிரச்னை தெரியாவிடில், உழைக்கும் சக்தி ஏற்படாமல் சமூக அமைப்பில் மாறுதல் ஏற்படாது. ஆகையால்தான் கல்வி முறையில் சமூக அறிவும் அதன் மலர்ச்சியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஸர்வோதயம்

வளமான அவரது பாடல்களில் புதுமை தழைக்கக் காணலாம்; தேச பக்தி அவற்றில் பரிமளிக்கின்றது; பாரதப் பண்பாட்டின் பெருமை உயர்த்தப்படுகின்றது. சூழ்நிலையை மதியாது வானவீதியில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த கவியல்ல "தே. வி." சமுதாய ஊழல்களைக் கேலியாகக் கூறிப் பரிகசித்து தீமையை உணர்த்தி மக்களை நல்வழிப் படுத்த தமது கவிதா சக்தியை அவர் பெரிதும் பயன் படுத்தினர். அவரது சமுதாய சித்திரக் கவிதைகளில் நகைச் சுவை நிறைய உண்டு. நாஞ்சில் நாட்டுப் பிள்ளைமாரிடையே இருந்து வந்த மருமக்கத் தாய முறையை தமது கேலிக் கவிதைகளால் தீர்த்துக்கட்டிவிட்ட பெருமை அவருக்கு உண்டு.

ஸ்ரீ பிள்ளையின் பக்திப் பாக்கள் தனிச் சிறப்புள்ளவை. சிறு பிராயத்தில் அவர் இயற்றிய விருத்தப் பாடல்கள் தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் போன்றோரின் அடிச்சுவட்டில் அமைந்தவை. முதுமையில் அவர் புனைந்த கீர்த்தனைகளும் பக்தியில் மலர்ந்தவை. ஆரம்பப் பாடல்களைவிட இவற்றில் ஆத்மானுபவம் நிறைய இருப்பதைக் காணலாம். இடைக்காலத்தில் புத்தரைப்பற்றி வரைந்த "ஆசிய ஜோதி" கருணைக் கடலாக "தே. வி." யை காட்டுகின்றது.

தேசம் விடுதலை அடைந்தபோது கவிஞர் களிக் கூத்தாடினர். சுதந்தர வாழ்வின் பொறுப்புக்களை உணர்ச்சி ததும்ப எடுத்துக்காட்டி, உண்மையுணர்ச்சியுடன் கூடிய உழைப்புத் தத்துவத்தின் உயர்வைப் புலப்படுத்திய அவருடைய பேருரையை ஒலிப் பதிவு செய்து அவர் புகழுடல் அடைந்த நாளன்றே தமிழகம் கேட்கும்படி ரேடியோ நிலயத்தார் செய்ததைப் போற்றுகிறோம். பண்பாட்டுடன் கூடிய உழைப்புத் தத்துவமே "தே. வி." வகுத்துத் தந்துள்ள வாழ்க்கை வழி. "உமர் கய்யாம்" என்ற பாரசீகப் பாடலின் தமிழாக்கத்தில் அவர் வழங்கியுள்ளபடி

> வாழும் வாழ்வில்
> உன்னையும் நீ
> மறந்துவாழ வேண்டுமடா?
> ஏழையாகி எளியவரின்
> எளியனுக வேண்டுமடா!
> தோழனுகி யாவர்க்கும்
> தொண்டனுக வேண்டுமடா!

என்பதுதான் தமிழ் மக்களுக்கு அவர் அருளிய நல்லுரை.

நல்லமுறையில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வளர்ந்தோங்க வேண்டும் என்பது அவருடைய பேரவா. திருவாங்கூர் கொச்சி தமிழ்ப் பகுதி தமிழகத்தில் ஐக்கியமாக வேண்டிய அவசியத்தை கல்நெஞ்சம் உருகக் கூடியவாறு தமது மரணப்படுக்கையிலிருந்து சிலவாரங்களுக்குமுன் அவர் முழக்கியதை உலகமறியும். அந்தக் குறையுடன் அவரது ஆவி அகன்றுவிட்டது. எனினும் அந்த லட்சியம் கைகூடுவதற்கு கவிஞரின் சங்கநாதம் நல்ல முறையில் பயன்படும் என்பதில் ஐயமில்லை. நிறைவாழ்வு நடத்திய இப்பெருங் கவிஞருக்குத் தமிழகம் தலை வணங்குகிறது. இனி வரும் தலைமுறைகள் சீரிய பண்புகளை உள்ளவர்களாக வளருவதற்கு அவரது கவிதைகள் துணை புரியக் கூடிய ஜீவ சக்தியுள்ளவை. அவற்றை போற்றிப் பேணுவது நல்லோர் அனைவரின் கடமை.

கிராமப் பிரதேசங்களில் 1270 பள்ளிக்கூடங்கள்

சர்க்கார் அறிக்கை

படித்துவிட்டு வேலையில்லாதிருப்போருக்கு வேலை கொடுப்பதற்கான இந்திய சர்க்காரின் திட்டத்தின்கீழ், இந்த ராஜ்யத்தில் பள்ளிக்கூடங்களில்லாத 1270 கிராமங்களில் ஒரே உபாத்தியாயரால் நடத்தப்படும் 1270 பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கும்படி சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். இந்த 1270 பள்ளிக்கூடங்களில் 881 பள்ளிக்கூடங்கள், 1000மும் அதற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் நிறுவப்படும். பாக்கி 389 பள்ளிக்கூடங்கள் 500-க்கு 1000-க்கும் உட்பட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டத்தின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்தாபிக்கப்படப்போகும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை வருமாறு :—

செங்கற்பட்டு 49, தஞ்சாவூர் 78, ராமநாதபுரம் 54, வட ஆற்காடு 114, திருச்சிராப்பள்ளி 168, நீலகிரி 5, தென் கன்னடம் 76, தென் ஆற்காடு 89, மதுரை 69, திருநெல்வேலி 47, சேலம் 334, கோயம்புத்தூர் 97, மலையாளம் 90, ஆக மொத்தம் 1270.

மேற்படி பள்ளிக்கூடங்கள் தவிர ஏற்கனவேயுள்ள பள்ளிக்கூடங்கள் 200-ல் உயர்தர ஆரம்ப வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். இப்பள்ளிக்கூடங்கள் கல்வி இலாகாவின் கூட்டுறவுடன் ஜில்லா போர்டுகளால் ஆரம்பிக்கப்பட்டு ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களாகவே நடந்துவரும். சர்க்கார் ஒரு பள்ளிக்கூடத்துக்கு ஒரு வருஷத்துக்கு ரூபாய் 1000-க்கு அதிகப்படாது உதவி நிதி அளிப்பார்கள். இது ஒரு வருஷத்துக்கு உபாத்தியாயரின் சம்பளம், படி, மற்றும் பள்ளிக்கூடத்துக்கு தேவையான சாமான்களின் விலைக்கான தொகையாகும். அந்தந்த ஊராரின் சுய முயற்சிகளினல் பள்ளிக்கூடம் நடத்துவதற்காக இலவசக் கட்டிடம் கிடைக்காத இடங்களில் ஒரு சிறு ஷெட் போட்டுக் கொள்வதற்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் ரூ. 500 அனுமதிக்கப்படும். ஆனல் ஸ்தல மக்கள் கூடிய விரைவில் பள்ளிக்கூடம் நடத்துவதற்காக இலவசக் கட்டிடத்துக்கு வழி செய்ய வேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறார்கள்.

செகண்டரி க்ரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பயிற்சி பெறாத பட்டதாரிகள், பட்டம் பெறாத கல்லூரிப் படிப்புப் பெற்றவர்கள், மெட்ரிகுலேஷன், எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவர்கள் ஆகியவர்கள் இந்தப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட அருகதை உடையவர்களாவர். இந்தஉபாத்தியாயர்களுக்குக் கீழ்க்கண்ட விகிதாசாரப்படி சம்பளம் கொடுக்கப்படும்:-

பயிற்சி பெறாத மெட்ரிகுலேஷன் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவர்கள், பட்டம்பெறாத கல்லூரிப் படிப்பு பெற்றவர்கள் சம்பளம் ரூ. 40-ம் கிராக்கிப்படியும், செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த ஜில்லாவில் தற்போது கொடுக்கப்பட்டு வரும் சம்பளமும், கிராக்கிப்படியும், பயிற்சி பெறாத பட்டதாரிகளுக்கு சம்பளம் ரூ. 50-ம் கிராக்கிப்படியும்.

மேற்படி யோக்கியாதாம்சங்களிலிருந்து வேலையில்லாமலிருப்பவர்

ஜெகத்தின் ஜோதி

நாமக்கல் ரா. பாலசுப்பிரமணியன்

"அச்சமற்ற மனநிலையே மனிதர்க்கெல்லாம்
ஆனந்த சுதந்திரத்தின் மகிழ்ச்சியாகும்
பிச்சை பெற்ற உயிர்வாழ நேர்ந்திட்டாலும்
பிழையில்லா சுகவாழ்வு அதுதான்" என்ற
நிச்சயமாம் நல்லறிவை நமக்குக் காட்டி
நிகரற்ற சன்மார்க்க நெறியில் நின்ற
இச் செகத்தின் ஜோதி எனும் எம்மான் காந்தி
இணையற்ற போதனை தான் என்றும் வேண்டும்.
உணவின்றி உயிர்வாழ முடியாதென்றால்
உழவின்றி உணவுதரும் வழியும் உண்டோ?
பணமின்றி வியாபாரம் நடக்காதென்றால்
பாடுபட்டப் பண்டமின்றி பணந்தான் ஏது?
குணமின்றிச் சமுதாயக் கூட்ட மில்லை
கூட்டுறவே சமுதாயக் குணமாம் என்ற
துணைவந்து உண்மைகளைத் துலக்கி வைத்த
தூயனந்த காந்திவழி தொழுது வாழ்வோம்.
"வேற்றுமைகள் உலகத்தில் இருந்தே தீரும்
வெவ்வேறும் ஆன வகையின் விரிப்பே பூமி
ஏற்றத் தாழ் வில்லாமல் இருப்பதற்கு
என்றென்றும் இவ்வுலகம் இடந்தராது
சாற்றுகின்ற பேதங்கள் எதுவும் அந்த
சர்வேசன் சந்நிதியில் சமமாம்" என்று
போற்றுகின்ற பிரார்த்தனையை புரியச்செய்த
புனிதன் அந்த காந்தி சொல்லே புவிக்குவேதம்.

கள் மேற்படி உபாத்தியாயர் வேலையை அபேட்சிப்பார்களேயானால் அவர்கள் தங்கள் பெயர்களை வேலையளிப்பு ஸ்தாபனங்களில்(எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகளில்) பதிவுசெய்துகொண்டு ஜில்லா போர்டுகளின் விசேஷ அதிகாரிகளுக்கும் ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கும் மனுச்செய்துகொள்ளவேண்டும்.

இன்னின்ன ஜில்லா வசதிகள் இத்தனை இத்தனை பேர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று ஒருவித நிர்ணயமில்லாததால் எவரும் எந்த ஜில்லாவில் நியமிக்கப் படுவதற்காகவும் மனுப் போடலாம். இந்த வேலைக்காக தனி மனுப்பாரம் ஏதும் கிடையாது. மனுச்செய்துகொள்வதற்கு ஒருவிதக் கட்டணம் கிடையாது. வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் படுபவர்களுக்கு ஒரு மாதம் குறுகிய காலப்பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு பயிற்சி நடக்கும் இடத்துக்குப் போய் வருவதற்கான பிரயாணப் படியும், பயிற்சி காலத்துக்காக சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாசாரங்களின்படி கொடுக்கப் படும்.

"அகற்றுவார்களா?"

இர. மு. பெ. பச்சையப்பன் ஆசான் ஆதாரப்பள்ளி

சீகராசபுரம், வாலாசா வட்டம்.

அறிஞர்களையும், வீரர்களையும், நீதிபதிகளையும், அதிபதிகளையும் விஞ்ஞானிகளையும் அவனிக்கு ஆக்கித்தரும் ஆரம்ப ஆசிரியர்கள் நிலையை எழுதத் தேவையில்லை. அருந்தமிழ் நாடே அறிந்தது மிக மிக அவல நிலை அன்று.

ஆரம்ப ஆசிரியர்களை எந்த விதத்திலும் உயர்த்தாமல் இருப்பதனுல் தான் ஆரம்பக்கல்வி நாளுக்கு நாள் சீர்குலைந்து வருகிறது. ஆரம்ப ஆசிரியர்கள் என்ருலே நாகரீகத்தின் வளர்ச்சியின் காரணமாக கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி இழித் தன்மையாகக் கருது கிருர்கள். கருதி வருகின்றனர். ஆனல் ஆரம்ப ஆசிரியர்களை எவ்வளவுக் கெவ்வளவு கீழ்த் தரமாக கருதி வருகிருர்களோ அவ்வளவுக் கவ்வளவு கல்வித் தரமும் கீழ்நிலையில் சென்றுக் கொண்டிருக்கின்றது. எழுதாமலே புரியும்.

இளஞ்சிரார்களுக்கு இனிமை மொழியைப் போதிக்கும் ஆற்றல் படைத்த ஆரம்ப ஆசிரியர்களை எவ்வளவுக் கெவ்வளவு பொது மக்கள் அலட்சிய மனப்பான்மையுடன் கருதுகிருர்களோ அவ்வளவுக் கவ்வளவு தான் நாட்டின் அறியாமையும் வளர ஏதுவாக இருக்கிறது. நாகரீகத்தில் வளர்ந்து விட்டோம் என்று எண்ணுகிருர்கள் ஒரு சிலர். இன்னும் நாம் நாகரீகத்தில் வளரவில்லை. அநாகரீகத்தில் தான் சென்று கொண்டிருக்கிருேம். அமைதியான இடத்திலே ஆராய்ந்து பாருங்கள்.

ஈகை வள்ளல்கள் பிறந்த இந்த வண்டமிழ் நாட்டில் வாழ்கிருேம். ஆசிரியர்களை சர்வ சாதாரணமாக பொது மக்கள் உபாத்தியாயர்கள் என்றும் ஆசிரியர்கள் என்றும் கூறுவதுண்டு. இப்பொழுது அம்மைச்சர்கள் முதல் ஆண்டிவரை, ஆசிரியர்களை வாத்தியார்கள் என்று பேசி வருகின்றனர். வாத்தியார்கள் என்ற வார்த்தை தற் காலத்தில் புகை வண்டி நிலையங்களிலும், மற்ற பொது இடங்களிலும், சர்வ சாதாரண மனிதர்களுக்கு வாத்தியார் என்ற அடை மொழியை வைத்து அழைக்கின்றனர் ஒரு சில மக்கள் (படித்தவர்கள் உள்பட). அப்படிப்பட்ட வார்த்தையை உபயோகித்து ஆசிரியர்களை அழைப்பது தகுமா? பொது மக்களே சிந்தியுங்கள் !!

உலக வழிகாட்டிகள் ஆரம்ப ஆசிரியர்கள் என்று மறந்து

விடக் கூடாது. மகாஞானிகளி லிருந்து மதிபடைத்தவர்கள் அத்தனைப்பேரும் ஏன் என்றால் ஆரம்ப ஆசிரியர்களை இழிநிலை யாக்க பொதுமக்களே காரணம் அல்ல அரசினர்.

ஊராளும் மன்றத்தின் தலை வர்களாக காட்சியளித்தார்கள் ஆரம்ப ஆசிரியர்கள் அன்று. இன்றோ ஊராளும் மன்றத்தின் மக்களால் இழித் தன்மையாகப் பாவிக்கப் படுகிறார்கள். இதற்குக் காரணம் நன் முறையில் ஆள் வோர் இல்லை. இருக்கிறார்கள் ஆனால்? அவர்களுக்கு அவகா சம் இல்லைபோலும். ஆராய்ந் துப் பார்க்க! அரசியலைப் பற்றி எழுத அவசியமில்லை யென்றா லும், அரசியலில் இருக்கும் அமைச்சர்களைப்பற்றி எழுத என் ஊற்றுமைக் கருவி ஓடு கிறது. ஆனால் அதை கட்டுப் படுத்தி ஒரு சில அமைச்சர்கள் மேடையில் பேசும்போது ஆசிரி யர்களை வாத்தியார்கள் என்று பேசுகிறார்கள். அவர்கள் அதை கட்டுப்படுத்திக் கொள்வார்களா? என எழுதுகிறேன். "நன்றியை மறவாதே அமைச்சர்களே" கல்வி கட்டத்திற்குக் கால்கோல் விழா நடத்தியது யார்? இந்த வினாவிற்கு ஒவ்வொரு அமைச் சர்களும் விடை அறிந்த பின் னர் பேசுங்கள் வாத்தியார்கள் என்று பொது மக்களுக்கும் அப்படித்தான் கற்பனை செய்யுங் கள். காலத்திற் கேற்றாற்போல் கடவுளுக்கு சமமான ஆசிரியர் களை வாத்தியார்கள் என்று அழைக்காதீர்கள்!

"எல்லோரும் இந் நாட்டு மன்னர்கள்" என பாரதியார் கூறிப்போந்தார் அவர் வழி ஏகும் நந் தமிழ் நன் மக்களே நமக் குள் ஏன் பாகுபாடு. வேற்றுமை, எல்லோரும் இழிநிலைப் படைத் தோர் இந் நாட்டில் இல்லையென கூறிக் கொண்டு ஏறு நடைப் போட்டு வாருங்கள்! கல்வித் தரத்தை உயர்த்த! நாகரீகத்தின் அடிப்படையை அழித்து வளர்ச் சிக்காணவேண்டுமானால் ஆரம்ப ஆசிரியர்களுக்கு, பொது மக்க ளும், அமைச்சர்களும், சில உரி மைகள் தர வேண்டும் ஆரம்ப ஆசிரியர்கள் வாழ்வை அமைச் சர்கள் அறிந்திருக்க மாட்டார் கள். நல வாழ்வில் இருப்பதா ல் கிராம மக்கள் நேரிடையாக ஆரம்ப ஆசிரியர்கள் வாழ்வைக் கண்டறிந்து வருகிறார்கள்.

சில ஊர்களில் இன்னும் தீண் டாமை இருப்பதால் அவ்வூர் களுக்கு ஆதிதிராவிட ஆசிரியர் களை மாற்றி விட்டால் வாழ்க்கை நடத்துவதே பெருந்திண்டாட்ட மாக இருக்கிறது. பள்ளியில் வாழ்க்கை நடத்தி வந்தாலும் உதவிகள் கிடைக்காது. ஆதி திராவிடர்கள் என கேள்விப் பட்டதும் அடவியில் வாழும் கொடிய விலங்குகளுக்கு சம மாக எண்ணிக் கொள்கிறார்கள். அத்தகைய ஊர்களுக்கு ஆரம்ப ஆசிரியர்களை (ஆதிதிராவிடர்களை மாற்றி விட்டால் அவர்கள் மக்

தியில் வாழ முடியுமா? சிந்தியுங்கள்! அரசினரே! இதற்கு ஓர் வழி வகுங்கள்! உடனடியாக ஐந்தாண்டு திட்டத்திலே காணவில்லை என்றாலும் இப்போது ஆள்வோராகிலும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு வழி வகுங்கள்! சாதியின் கொடுமை ஒழியவில்லை. ஆனால் ஒழிந்து விட்டது என பிரசாரம் மாத்திரம் பலமாக இருக்கிறது. நம் இந்தியா தேயத்தின் பிரதம அமைச்சர் நேருஜி கூட தீண்டாமை ஒழிந்து விட்டது என நாகபுரி கூட்டத்தில் பேசி யிருக்கிறார்.

கடந்த ஆண்டின் போது தீண்டாமை ஒருசில இடத்தில் ஒழிக்கப்பட்டதாக காணப்பட்டாலும் படித்தவர்கள் உள்ளத்தில் கூட தீண்டாமை வளர்ந்து வருகிறது எந்த இனத்தவர் ஆரம்ப ஆசிரியர் பணியாற்றினாலும் அவர்களுக்கு கிராம மக்கள் உதவியிருத்தல் வேண்டும் என்கிறேன். பொது மக்கள் மனம் வைத்தால் அரசியலார் அதற்கு தகுந்த நட்வடிக்கை எடுப்பார்களா? ஒரு ஊருக்குப் புதியதாக மாற்றிய ஆதிதிராவிட ஆரம்ப ஆசிரியர்கள் அவர்கள் இனமக்கள் வதியும் இடத்திலிருந்து வந்தால் பள்ளியில் படிக்கும் இளஞ் சேய்களுக்கு ஒருவித இழிவுணர்ச்சி ஏற்படுகிறது. புதியதாக வந்த ஆசிரியர் காதுகளில் விழும்படி, வந்திருக்கும் ஆசிரியர் "பறையராண்டா" என பேசிக் கொள்வார்கள். அதற்காகத் தான் பொது மக்களே! நீங்கள் உங்கள் ஊருக்கு எந்த இன மக்கள் ஆசிரியராக வந்தாலும் தங்க இட மளித்தால் போதுமானது. எனக்காக எழுதவில்லை. என் போன்ற இள ஆசிரியர்கள் மாவட்டக் கழக நிர்வாகத்தின் கீழ் பணி யாற்றுபவர்கள் அவதியுறுகிறார்கள், அல்லல் படுகிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களை நகரப்புரமாக மாற்றினால் ஏதுவாக இருக்கும். மாவட்டக் கழக அதிபதிகளும் அந்த ஆசிரியர்களைப் பற்றி கவனிப்பதும் கிடையாது. பொதுவாக ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேரும் அல்லல் படும் வாழ்க்கையில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். மாவட்டக் கழக அதிபதிகளும், அரசினரும் கவனிப்பார்களா?

ஏணியாகவும், தோணியாகவும், கோணியாகவும் இருக்கிறார்களே ஒழியே முன்னேற்றமடையவில்லை. ஏன்? ஆரம்ப ஆசிரியர்கள் வாங்கும் ஊதியம் ஒரு புறமிருக்க அவர்களுக்கிருக்கும் உரிமை தான் இழி நிலைக்குள்ளாக்குகிறது. எந்த நாட்டில் ஆரம்ப ஆசிரியர்கள் முன்னேற்றப் பாதையிலே செல்கிறார்களோ அந்த நாட்டில் கல்வி ஒளியும் மிகைப்பட ஒளிக்கும். அங்குள்ள மக்களும் ஏறு நடைப் போட்டு வீறுக்கொண்டு செல்வார்கள். இதில் ஐயமில்லை. அமைச்சர்கள் சிறிது சிந்தித்தால் ....அல்லது பொருள் படைத்தோர் சிந்தித்தால் சிறந்த பணியினை செய்து முடிக்கலாம்

ஐந்தறிவு படைத்த ஓமரியாகிலும் நன்றிமறவாமல் இருக்கிறது. ஆனால் ஆறறிவு படைத்த அறிஞர்கள் குழாத்தியில் அது கிடையாது. "நன்றி மறப்பது நன்றன்று" என்றிருப்பவர்களுக்கு பொருந்தாது.

ஒவ்வொரு கிராமத்தில் கிருத்துபவர்கள் நடத்தும் பள்ளிகளுக்கருகில் ஆசிரியர்கள் இருக்க இல்லம் அமைத்திருக்கின்றனர். அதைப்போல் மாவட்டக் கழகப் பள்ளிகள் எங்கெங்கு இருக்கிறதோ ஆங்காங்கு இல்லங்கள் அமைத்துத் தரவேண்டும் என்கிறேன். இல்லையேல் அரசினராவது அல்லது அவ்வூர் மக்களாவது ஆசிரியர்களுக்கென ஒரு இல்லம் அமைப்பார்களா? (வசதியுள்ளவர்களுக்கல்ல) இலவசமாக என்று எண்ணிவிடாதீர்!!

ஓர் கிராமத்திற்கு தொண்டு புரிய ஆரம்ப ஆசானாக செல்வதே சிறந்தது என உலகம் போற்றும் உத்தமர் கூறினார். ஆனால்? அந்த அண்ணல் ஆரம்ப ஆசிரியர்கள் வாழ்வை இன்றிருந்து கண்டாரானால் கண்ணீர் வடிப்பார். அதற்கு தகுந்த நடவடிக்கையும் செய்ய ஆயத்தமாக அதற்கு தகுந்த ஆக்க வேலையில் ஈடுபடுவார். வாழ்க்கையின் வழிகாட்டிகள் வள்ளலாகத் திகழ வேண்டாமா? சிந்தியுங்கள் பொதுமக்களே! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள் அமைச்சர்காள்!!

ஔவை மூதாட்டியார் தமிழ் தொண்டாற்றியவர்களில் முதன்மையிடம் பெற்றவர். அவர் பிறந்த தமிழ் நாட்டில் ஆரம்ப ஆசிரியர்கள் அவதியுறுவது ஏன்? "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" எனக் கூறினார் ஔவை. ஆரம்ப ஆசிரியர்கள் கடவுளுக்கு சமமானவர்கள். வாழ்க்கை சகடத்தை வளமுடன் ஓட்டிச் செல்ல முடியாமல் திகைக்கிறார்கள். அவதியுறுகிறார்கள். பொது மக்களே! அமைச்சர்களே! ஆரம்ப ஆசிரியர்களுக்கு வாழ்க்கை வளம் உயர ஓர் சிறந்த வழி செய்ய முற்படுவதற்கு முன்னால் வாத்யார் என்ற இழிச்சொல்லை அகற்றுங்கள்! அகற்றுங்கள்!! வணக்கம்!!!

காந்ீயம் ஒன்றுதான் உலகில் நிரந்தரமாக நிலைத்திருக்கும். உலகம் உய்ய காந்தீயம் ஒன்றுதான் வழி. இதர நாடுகளுக்கு இந்தியாதான் வழிகாட்டவேண்டும்.

காந்தீயம் ஒரு கண்ணாடி. நாம் ஒவ்வொருவரும் அதில் நம்முடைய அலங்கோலத்தைக் கண்டறிந்து நம்மைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

உபநிஷதச் சிறு கதைகள்

(ப்ருஹதாரண்யக உபநிஷதம்)

" ஆசி "

உண்மைப் பொருள் ஒன்றே உருவும் பெயருங்கொண்டு பலவாகப் புலனாகின்றது.

ஆதியில் இவ்வுலகம் ஆத்மாவாக இருந்தது. முதலில் எங்குமளாவிய ஒரு புருஷவடிவமாகத் தன்னை ஆக்கிக்கொண்டு விராட் அல்லது ப்ரஜாபதி விளங்கினார். அவர் தன்னைக் காட்டிலும் வேறாக ஒன்றும் இருப்பதாகக் காணவில்லை. அப்பொழுது 'நான் இருக்கிறேன்' என்று கூறிக்கொண்டார். ஆகலின் அவர் 'நான்' (அஹம்) என்பதனால் அறியப்படுகின்றார். இப்பொழுதும் ஒவ்வொரு மனிதனும் தன்னை 'நான்' என்று கூறிக்கொள்கின்றான். பின்பே அவனுக்கு இடப்பெற்றுள்ள பெயரை யுரைக்கின்றான். இந்த விராட் இந்நிலையை அடைவதற்கு முன், எல்லாத் தீவினைகளையும் முதலில் எரித்தவராவார். இதனால் அவர் புருஷன் (பூர்வ: ஔஷத்=முன்பே எரித்தார்) எனப்படுகின்றார்.

இவர் தனியாக இருப்பதாக நினைத்து நம்மைப்போல் அச்சமடைந்தார். சற்று ஆராய்ந்து நோக்கியபின்னர், 'இரண்டாவதாக ஒன்று இருந்தாலல்லவோ, அச்சமுறவேண்டும்' என்று தெளிந்ததும் அச்சம் அகன்றது. ஆகவே, தன்னைக்காட்டிலும் வேறானவஸ்து இல்லை என்ற உணர்வு வந்ததும் அச்சமென்பதற்கு இடமே இல்லை. இரண்டாவது பொருள் ஒன்று உண்டென்ற எண்ணத்தாலே தான் அச்சம் ஏற்படுகிறது.

தனித்திருப்பதில் விராட் இன்புறவில்லை. தனக்கு ஒரு துணை வேண்டுமென்று விரும்பினார். ஆண் பெண் இணைப்புற்ற உருவமாக ஆனார். இதனால் தனது உருவத்தை இழந்துவிடவில்லை. தன்னைப் பெரிதாக்கிக் கொண்டார். அந்த உருவத்தை இரண்டாகப் பிரித்தார். இப்பிரிவினின்றே கணவன், மனைவி என்ற உறவு ஏற்பட்டது. ஆண் உருவம் மனு எனவும், பெண்ணுருவம் சதரூபா எனவும்படுகிறது. இதனையே யாஜ்ஞவல்க்யர், "மானிட உடல் பிளர்த பிப்பியின் (கடலையின்) அரைப் பகுதிபோன்று, தன்னில் அரைப் பகுதியாகும். துணைவியைக் கொள்வதால் மற்ற பகுதியையுமடைந்து நிறைந்தவனாகின்றான்" என்று கூறினார். மனு என்ற விராட் சதரூபா என்ற துணைவியுடன் இணைந்து மாந்தரைப் படைத்தார். தன்னைத் தோற்றுவித்துத் தன்னுடனேயே சேர்க்கை கொள்ளல் தகாதெனத் தன்னை மறைத்து சதரூபா என்பாள் ஓர் 'ஆ' (பசு) ஆயினள். அப்பொழுது மனு என்ற விராட் ஒரு காளை உருவெடுத்து அவளுடன் சேர்ந்தமையால் ஆவினம் தோற்றமடைந்தது. இவ்வாறே குதிரை, கழுதை, வெள்ளாடு, செம்மறியாடு, முதலிய எறும்பு ஈறாகவுள்ள எல்லாம் படைக்கப் பட்டன. படைப்பு முடிந்ததும், "யானே இவ்வுலகைப் படைத்தேன். ஆதலின் அது என்னைக்காட்டிலும் வேறுபட்டதல்ல" என்று விராட் உணர்ந்தார். இவ்வாறு ஒருவன் தன்னை இவ்வுலகுடன் ஒன்றுபட்டவனாகக் கருதுவதால் படைப்புத்தலைவனது நிலையை அடைகின்றான்.

இருபால் படைப்புக்குப்பின், விராட் தனது வாயை, கையிட்டுக்கடைவதால் அக்னியைத் தோற்றினர். வேள்வியில் "இந்த தேவனே வணங்கு, இந்த தேவனே வணங்கு" என்று கூறப்படும் தேவர்களெல்லாம் அந்த விராட் என்ற ஒரே தேவனே. அவர் பின்பு ரஸவஸ்துக்களைப் படைத்தார். உணவையும் படைத்தார். உணவும், உண்போனும் கொண்டதே இவ்வுலகு. இது உயர்தரப்படைப்பாகும். ஏனெனில் புருஷநிலையிலிருந்து அழியா அமரர்களையும் அவர் படைத்துள்ளார்.

இவ்வாறு முதலில் தெளிவற்ற நிலையில் இருந்த உலகம் உருவும் பெயருங்கொண்டு தெளிவுற்ற நிலையாகக் காணப்படுகிறது. இந்த ஆன்மாவே, உறையில் கத்தி போன்றும், கட்டையில் நெருப்பு போன்றும் எங்கும் உறைந்துள்ளார். எனினும் ஆன்மாவின் இயல்பு நிலையை அறிவதில்லை. மூச்சாகத் தொழில் புரிகையில் அவர் ப்ராணன் என்றும், பேசுகையில் வாக்கு (பேசுவோன்) என்றும், காண்கையில் காண்போனென்றும், கருதுகையில் கருதுவோன் என்றும் வழங்கப்படுகின்றார். உயிர், வாக்கு, கண், மனம் என்பன தொழிலுக்கேற்ப உள்ள தனித்தனிப் பெயர்களே. இவற்றைத் தனித்தனியே கருதி உபாஸனை செய்வோன் முழு உண்மையை அறியாதவன். இவையெல்லாவற்றையும் ஆன்மா என்றே உபாஸனை செய்யவேண்டும். பலவாகப் காணப்படுவன, நீரில் பிரதிபலிக்கும் சூரிய பிம்பங்கள் போன்றன. இவை எல்லாவற்றுள்ளும் ஆன்மாவையே அறியவேண்டும். ஆன்மாவை அறிவதால் மற்றெல்லாம் அறியப்படும். காலடிச் சுவடுகளை கொண்டு காணமற்போன பசுவைத்தேடிக் காண்பது போன்று எங்கும் உறைந்துள்ள ஆன்மாவைக் கண்டறியவேண்டும். இவ்வாறு அறிவோன் ஆன்மாவில் கலந்து விடுதலை பெறுகின்றான்.

ஆன்ம உணர்வின் அவசியம்.

இந்த ஆன்மா மகவைக்காட்டிலும் பிரியமானது. செல்வத்தினும் அரிது. மற்றெல்லாவற்றினும் அரிது. இந்த ஆன்மா உடல் உறுப்புகளினும் அண்மையிலுள்ளது. தன்னுள்ளேயே உள்ளது. ஆன்மாவினும் வேறு ஒன்றை ப்ரியமானதென்று கருதினல் அந்த ப்ரியமாகக்கொண்ட வஸ்து அழிவடையும் என்பதை உணரவேண்டும். ஆதலின் ஆன்மா ஒன்றையே ப்ரியமானதாகக் கொண்டு உபாஸனை செய்ய வேண்டும். அதனல் நீடூழி வாழ்வர்.

பிரம்மத்தை அறிவதனல் எல்லாமாகிவிடுமோ வென்று மனிதர் கருதுகின்றனர். பிரம்மத்தையுணர்ந்து எல்லாமாகியவர் எவரேனும் உண்டோ என்ற வினவும் எழுகின்றது. உண்டு என்பது இப்பொழுது விளக்கப்படுகிறது.

இது ஆதியில் பிரம்மமாகவே இருந்தது. 'நான் பிரம்மமாக இருக்கின்றேன்' என்று இது தன்னைத்தானே உணர்ந்ததனல் இது எல்லாமாயிற்று. தேவர்களில் எவரெவர் இதை உணர்ந்தனரோ அவர்கள் அதுவே ஆயினர். அங்ஙனமே ரிஷிகளிலும் மனிதரிலும் ஆகும்; வாமதேவர் அவ்வாறு அறிந்தார். "நான் மனுவாக இருந்தேன், சூரியனாக இருந்தேன்" என்று அறிந்ததைக் கூறினர். இப்பொழுதும் எவன் "நான் ப்ரம்மமாக இருக்கிறேன் (அஹம் ப்ரஹ்மாஸ்மி)" என்று அறிகின்றனே அவன் இது அனைத்துமாகின்றான்.

அவனது பெருமையைக் குறைவுபடுத்த தேவர்களாலும் இயலாது. அவன் அவர்களுக்குங்கூட ஆன்மாவன்றோ! தான் வேறு, தேவதை வேறு என்று எவன் தன்னினும் வேருக தேவதையை உபாஸிக்கின்ருனே அவன் அறிவிலி. தேவர்களுக்கு உழைக்கும் ஒரு பசுப்போல் ஆகின்ருன். பல பசுக்கள் (ஆடு, மாடு, குதிரை போன்றன) மனிதனுக்கு உழைப்பது போன்று, மனிதர் தேவதைகளுக்கு உழைக்கின்றனர். ஒரு பசு நஷ்டமானுலும் மனிதன் வருத்தமடைகின்ருன். பல நஷ்டமாயின் கேட்பானேன்? அதுபோன்றே, மனிதன் பிரம்மத்தை அறிவதை தேவர்கள் விரும்புவதில்லை. [அற்ப சுகங்களில் பற்று மிகக் கொண்டு ஆயுளைக்கழிக்கும்படி ஆசை தூண்டுகின்றது. அவற்றின் வரம்பு அறிந்து பயன் படுத்திக்கொண்டு ஆன்ம அறிவு நாட்டத்தில் உறுதி கொண்டு அழியாப் பெருநிலையை அடையவேண்டு மென்பதை வற்புறுத்தும் அரிய உபதேசமாகும் இது]

நான்குவர்ணப் படைப்பு நலம் நல்குதற்கே.

முதலில் பிரம்மா ஒருவரே பிரிவுபடாமல் இருந்தார். ஒருவரே இருந்ததால் தன்னைப்பெருக்கிக் கொள்ளவில்லை. பின்பு இது போதாதென்ற குறையைக் கண்டார். தன்னிடமுள்ள வன்மையை நன்கு வெளிப்படுத்துவதாயின் மற்ற தேவர்களையும் படைக்கவேண்டு மென்று எண்ணங்கொண்டார். க்ஷத்ரிய தேவ வடிவைத்தோற்றினர். அதிலிருந்து வன்மையும் வீரமும், துணிவும், தொழிலில் ஆற்றலும் நிறைந்த இந்த்ரன் (தேவராஜன்) வருணன் (ஜல ஜந்துக்களின் தலைவன்), ஸோமன் (வேட்புத் தலைவன்), ருத்ரன் (விலங்குகளின் தலைவன்), பர்ஜன்யன் (மின்னொளி முதலாகவுள்ளவற்றின் தலைவன்), யமன் (தென்புலத்தார் தலைவன்), ம்ருத்யு (பிணிகளின் தலைவன்), ஈசானன் (ஒளிகளின் தலைவன்), மற்றும் பல தேவர்களும் தோன்றினர்.

திவியிற் போன்று புவியிலும் ப்ராம்மணர் (அறிஞர்) க்ஷத்ரியர் (வீரர்) என்ற பாகுபாட்டை நிறுவினர்.

பிரம்மா, முதலில் க்ஷத்ரியவடிவத்தையே தோற்றினர். ஆதலின் க்ஷத்ரியர்களைவிட உயர்ந்தவர் இல்லை. இதன் அறிகுறியாகவே ராஜஸூய யாகத்தில், தாழ்ந்த ஆஸனத்திலிருந்து 'பிரம்மா' என்ற வேள்விக்குரவர் க்ஷத்ரியனைத் துதிக்கின்ருர். ஆயினும், பிரம்மாவே க்ஷத்ரியனின் தோற்றத்திற்குக் காரணமாதலால் வேள்வி முடிந்ததும் க்ஷத்ரியன் பிரம்மா எனும் ப்ராம்மணனை வணங்குகின்ருன். பிராம்மணரை அவமதிப்பவனே, தீங்கிழைப்பவனே தன்னை அவமதித்துத் தனக்கே தீங்கிழைப்போன் ஆவன். தீதுற்ற செயல்களைப்புரியும் துஷ்டனே இவ்வாருகின்ருன்:

[இதனால் அறிஞரும் வீரரும், ஒருவரையொருவர் அடுத்துத் தொழில் புரிவதனால் உலகிற்கு நன்மை யுண்டாகுமென்றும், வீரன் அறிஞனோடு முறண்பாடு கொள்வதால் அவன் கொடியோனுகித் தனக்கும் உலகிற்கும் தீங்கிழைப்போனுகின்ருன் என்ற அனுபவத்திற் காணப்படும் உண்மை விளக்கப் பெற்றதாகின்றது.]

க்ஷத்ரியப் படைப்பினுலும் தனது குறை நீங்கவில்லை யென்று உணர்ந்து வைச்யவடிவங்கொண்டார். அதிலிருந்து வஸுக்களெனும் எண்மரும், ருத்ரர் எனும் பதினொருவரும், ஆதித்யரெனும் பன்னிருவரும், விச்வே தேவர்

எனும் பதின்மரும், (39 பேரும்), மருத்துக்கள் எனும் எழுகூட்டத்தினரும் (எழுவர் கொண்ட எழுகணங்கள், அதாவது 49 மருத்துக்கள்) தோன்றினர். இதனாலும் தனது நோக்கம் நிறைவேறாதெனக் கண்டார். சூத்ர வடிவம் கொண்டார். அதிலிருந்து பூஷன் (எல்லோரையும் போஷிக்கக்கூடியவன்) என்ற தேவன் தோன்றினான். இவ்வுலகு, அதில் வசிப்போர் எல்லோரையும் போஷிப்பதால் பூஷன் எனப்படும். திவியில் படைத்ததை யனுசரித்துப் புவியிலும் வைச்யர், சூத்ரர், என்ற மற்ற இருவர்ணப் பாகுபாடுகளையும் நிறுவினார்.

இதுவும் குறையை முற்றும் நீக்காதது கண்டு, பிரம்மா தர்மம் என்ற ஒழுக்க நெறியைத்தோற்றி இவர்கள் எல்லோரையும் பிணைத்துவைத்தார். இது க்ஷத்ரியனைக்கூட அடக்கியாளுகிறது. வலுவற்றவனும் தர்மத்தால் (ஆட்சியாளர் மூலமாகக் கையாண்டு வலியானை வென்றுவிடலாம். தர்மம் என்பது ஸத்யம் (வாய்மை). ஆகவே, ஸத்யம் பேசுவோனை தர்மம் உரைப்போன் என்றும், தர்மம் கூறுவோனை ஸத்யம் உரைப்போன் என்றும் கூறுகின்றனர்,

[அறிவு, துறவு, தன்னலமற்ற தொண்டு முதலியன ப்ராம்மணனின் இயல்பு, பராக்ரமம், துனிவு, ஆட்சிவன்மை, பொறுமை முதலிய பண்புகள் க்ஷத்ரியனின் இயல்பு. வாணிபம், கூட்டுறவு, உழவு, செல்வம் பகிர்த்தல் முதலியன வைச்யனது இயல்பான பண்புகள். மனங்கோணாத் தொண்டு சூத்ரனின் இயல்பு. அவரவர் உரிமைக்கும் திறமைக்கும் எற்ற தொழில்களை மேற்கொண்டு, அவற்றைச்செவ்வனே நிறைவேற்ற முற்படுதலே தர்மத்தைப்பின்பற்றலாகும். முரண்பாடின்றி எல்லோரும் இன்புற்று வாழ்வதற்காக வகுக்கப்பட்ட முறையே தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட வர்ணப்பாகுபாடு. இப்பாகுபாடு தற்காலம் குறைபாடுற்றிருக்கிறது. குறைபாட்டை நீக்கத்திறனில்லாது பாகுபாட்டைக்குறை கூறும் குற்றறிஞர்களே இன்று காணப்படுதலின் தனிநலம் குன்றிவருவது ஒருபுறமிருக்க நாட்டுநலம் நலிந்து வருவதை நாளுக்குநாள் நாம் காண்கின்றோம்.]

ஆன்ம உணர்வின் ஆதாரமே வேள்வி

இவ்வாறு நான்கு வர்ணங்களைப்படைத்து, பிரம்மன் அச்னியாகவும், ப்ராம்மணனாகவும் ஆயினன். வேறு வடிவங்களில் மற்ற மூன்று வர்ணத்தினனாகவும் ஆயினன். அக்னியும் அந்தணனும் அனைவற்றிற்குங்காரணமாக முதலிடம்பெற்று விளங்குகிறனர். தனக்கு உரிய கடமைகளைச் செய்யாது, ஆன்மஉணர்வும் அடையாது இவ்வுலகினின்று நீங்குவோன் தன்னைத் துன்பத்தினின்றும் விடுவித்துக்கொள்ளாதவனாகின்றான். ஆன்ம அறிவின்றி அச்வமேதயாகம் செய்தாலும் அதனால் எற்படும் பயன் கனவிற்காணும் இன்பம் போன்று கணப்பொழுதில் தீர்ந்துவிடும். ஆன்மாவைத் தனது உலகமாகக் கருதி உபாஸிப்பதால் அதன்பயன் அழிவதில்லை. உபாஸகன் விரும்பியதை யெல்லாம் அடைகின்றான்.

இந்த ஆன்மா (ஆன்மநோக்கு கொண்டு உரிய கடமைகளை செய்வதால்) எல்லோருக்கும் உலகமாக இலங்குகின்றான். வேள்விகள் வேட்பிப்பதால் தேவர்கட்கு உலகமாக விளங்குகின்றான். வேத மோதலால் ரிஷிகளுக்கு உலகமாக விளங்குகின்றான். சிராத்தம், தர்ப்பணம் இவற்றால் தென்புலத்

தாருக்கு உலகமாகின்றான். மனிதருக்கு இருப்பிடம், உணவு முதலியன கொடுத்தலால் மனிதருக்கு உலகமாக இயங்குகின்றான். நீர், புல் கொடுத்து உதவுவதால் பசுக்களுக்கு உலகமாகின்றான். மற்று, விலங்கு, பறவை, எறும்பு ஈறாகவுள்ளவையெல்லாம் வாழவசதியளிப்பதால் இவைகட்கெல்லாம் உலகமாகவும் விளங்குகின்றான். தனது நலனைத்தான் விரும்புவது போன்று, மற்றெல்லோரும் ஆன்மாவை உணர்ந்து கடமைகளைச்செய்வோருக்கு நலனைத்தேடுகின்றனர். இவ்வாறு அகப் பொருள் கொண்டு ஐம் பெரும் வேள்விகள் (பஞ்சமஹாயஜ்ஞம்) நன்கு விளக்கங்கொண்டுள.

அகநோக்கே குறை நீக்கும்.

ஆன்மா ஒன்றே முதலில் தனித்திருந்து, துணைவியையடைந்து, படைப்பெனும் மகவைப்பெற்று, வேள்வி யெனும் தொழிலாற்றி அறமெனும் செல்வத்தை நிறுவியது போன்று, மனிதனும் மனைவியைக் கொண்டு இல்லற மேற்று, மகவைக் கோரியடைந்து, வேள்விகள் புரிய வேண்டி செல்வத்தையும் தேடுகின்றான். இவையனைத்தையும் பெறும் வரையில் குறையுள்ளவனாகவே கருதிக் கொள்கிறான்.

உண்மையில் நிறைவு எற்படுவது அகநோக்கிலே ஆகும். மனம் (உடலுறுப்புகளுக்குத்தலைமை கொண்டிருப்பதால்) ஆன்மாவாகவும், வாக்கு (மனத்தைத் தொடர்ந்து நிற்பதால்) துணைவியாகவும், ப்ராணன் (மனோ வாக்குகளின் வன்மையாக இருத்தலின்) மகவாகவும், கண் (வேள்விப் பொருள்களைக்கண்டு அவற்றை அடைவதால்) மானிடச் செல்வமாகவும், செவி (தேவர்களைக்குறித்த அறிவைப் பெற உதவுவதால்) தைவீகச் செல்வமாகவும், ச்ரீரம் (தொழில்புரிவதால்) சடங்காகவும் உளவெனக் கருதப்படவேண்டும். இந்த வேள்வி ஐவகை கொண்டது, சடங்கு இன்றி செய்யப்படுவது. ஆமுதலாக உள்ள பசுக்கள், மாந்தர், மற்றிவை எல்லாமுமே ஐவகை கொண்டன. இவ்வாறு இந்த ஐவகை வேள்வியை அறிவோன் இவ்வுலகெல்லாவற்றையும் தனதாகவே, தனது ஆன்மாவாகவே அடைகின்றான்.

(அட்டை 3-ன் தொடர்ச்சி)

ஒவ்வொரு ஆசிரியரும் செய்து கொள்ள வேண்டிய சபதம்

நான்,..........ஆசிரியர்,..........பள்ளிக்கூடம், இதனால் உறுதி கூறுவது என்னவென்றால், இந்த ஆசிரியர் சாஸனத்தில் குறிப்பிட்ட பொறுப்புக்களை ஒப்புக் கொள்வதோடு, அதில் குறிப்பிட்ட உரிமைகளை அடைவதற்கும் பாடுபடுவேனாக.

இடம்.........

(ஒப்பம்).....................

தேதி.........

பக்கம் 18-ன் தொடர்ச்சி

யுண்டு. திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேரவேண்டும் என்பதுதான் அவருடைய கருத்து. "திருவாங்கூர் தமிழ் மக்கள் தாய்த் தமிழ் நாட்டுடன் சேர வேண்டுமென்று கூறுவது இயற்கையானது; நியாயமானது; தடை சொல்வது பொருந்தாது" என்று அவர் சென்ற மாதம் தினமணி விசேஷ நிருபருக்கு அளித்த பேட்டியில் வற்புறுத்தியுள்ளார்.

இது 15 லட்சம் மக்கள் கருத்து பற்றிய பிரச்னை. ஆடு, மாடுகள் விஷயமல்ல தமிழர்கள் பிரச்னை என்று கடுமையாக அவர் சுட்டிக் காட்டினார்.

கவிமணியின் வாழ்க்கை வரலாறு

ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை 1876-ல் தென் திருவாங்கூரில், நாகர்கோவிலுக்கருகிலுள்ள தேரூர் என்ற இடத்தில் பிறந்தார். இவரது தந்தையார் சிவதாணுப்பிள்ளை, தாயார் ஆதிலட்சுமியம்மாள். பரம்பரையாக தமிழ் புலமை நிரம்பிய குடும்பத்தில் பிறந்தவர். உள்ளூர் பள்ளிக் கூடத்திலேயே படித்தார். அப்போதே அவருக்குத் தமிழிலும் கவிதையிலும் ஆர்வம் பெருகியது.

திருவாவடுதுறை ஆதீனம் கட்டளைத் தம்பிரானுகிற சாந்தலிங்கத் தம்பிரானிடம் முறையாகத் தமிழ் பயின்றார். திருநெல்வேலி உமையொருபாகக் குருக்களிடம் தீக்ஷை பெற்றார்.

19-வது வயதில் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியராக ஸ்ரீ பிள்ளை தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். 1901-ல் திருவாங்கூர் சர்வகலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி ஏற்று, 1931-ல் ஓய்வு பெற்றார். 1940-ல் அவருக்கு 'கவிமணி' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. கவிமணி ஏராளமான பாடல்கள் இயற்றியிருக்கிறார். உமர்கய்யாத்தை மொழி பெயர்த்திருக்கிறார்.

1938ல் பிரசுரிக்கப்பட்ட 'மலரும், மாலையும்' என்ற அவருடைய கவிதைத் தொகுதி ஐந்து பதிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அருடைய பாடல்கள் சங்கீதக் கச்சேரிகளில் பாடப்படுவதுண்டு. அண்ணுமலை சர்வகலாசாலை, மதுரை தமிழ்ச் சங்கம், திருவாடுதுரை ஆதீனம் ஆகிய ஸ்தாபனங்களிலிருந்து அவருக்குப் பொன்னுடைகள் வழங்கப்பட்டன. அவருடைய பிரசங்கங்கள் ரேடியோ மூலம் ஒலி பரப்பப் பட்டிருக்கின்றன.

ஸ்ரீ சுத்தானந்த பாரதியும், ஸ்ரீ சதாசிவம்பிள்ளையும் அவருடைய வாழ்க்கை சரித்திரத்தை எழுதியிருக்கின்றனர். தேரூரில் அவருடைய பெயரால் ஒரு புத்தகசாலை நடத்தப்படுகிறது. நாகர்கோவிலில் மற்றொரு புத்தகசாலை கட்டப் படுகிறது.

கவிமணிக்கு சிலாசாஸன ஆராய்ச்சியில் நல்ல பயிற்சி உண்டு. சில கல்வெட்டுகளை பரிசோதனை செய்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை பழம் பெரும் புலவர்; பழைய நன்மைகளை விரும்புவதுடன் புதிய நன்மைகளையும் போற்றுவார். மூடக் கொள்கைகளை பலமாகக் கண்டிப்பார்.

'தினமணி'யின் அன்பர்

கவிமணி 'தினமணி'யின் அன்பராவர். நந்தன வருஷப் பிறப்பு விசேஷ இதழுக்கு அன்னர் அனுப்பிய வாழ்த்துப்பா வருமாறு:

மெய்யெலாம் நன்கு
விளங்கி வளர்ந்து வரப்
பொய்யெலாம் மங்கிப்
புறம்போக—வையமிசைப்
புத்தொளி வீசிப்
பொலிந்து 'தினமணி' நீ
நித்தமும் வாழ்க நிலத்து.

தி. கோ. தமிழர் விஷயத்தில் அக்கறை

திருவாங்கூர் தமிழர் விஷயத்தில் கவிமணிக்கு ரொம்ப அக்கறை

(பக்கம் 17ல் பார்க்க)

"கலையின் சிறப்பு"

மதுரை இருள்மணி, உத்திரமேரூர்.

வாழ்க வளம்பெரும் பாரதம்!

பற்பல விடயங்கள் இன்றைய உலகில் பத்திரிகை வாயிலாக வெளிவருகிறது. அதை நான் போற்றுகிறேன். ஆனால் காதல் கதைகள் என்ற பெயரால் இன்று பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளைப் பார்க்கும் போது எனக்குமட்டுமல்ல, நமக்கே தமிழின்மீதே அநுதாபம் ஏற்படுகிறது. காரணம்: கற்பனை சிகரத்திலே கறைந்தெழுகிறது.

மக்களின் மனதைச் சபலப் படுத்தும், காமக்கிளர்ச்சிகளை அதிகப்படுத்தும் மிகக் கீழ்த் தரமான கதைகளே இன்று பத்திரிகைகளைப் பெரும்பாலும் அலங்கரிக்கின்றன. அந்தக் கதைகளைப் படிப்பதன் மூலம் இன்று இளைஞர் உலகம் அடைந்துள்ள தீமை சொல்லுந்தரமானதல்ல. உறுதியான-நிலையான இளைஞர் உள்ளம் அக்கதைகளை படிப்பதன் மூலம் நிலைகுலைந்து தடுமாடுகிறது. மிருக உணர்ச்சியே அந்த இளம் இதயங்களை ஆக்கிரமிக்கிறது. தெருவில் காணும் பெண்கள் அனைவரையும் விபரீத எண்ணத்தோடு பார்க்கும் தீய பண்பாடு இன்று இளைஞரிடையே விரவிக்கிடக்கிறது.

மனைவியைத்தவிர மற்ற பெண்களைச் சகோதரிகளாகவும், தாய்மார்களாகவும் மதிக்கும் தமிழருடைய பண்பாடு இப்பொழுது இருந்த இடமே தெரியவில்லை. என்னே! நாம் அடையும் பரிதாபம். சமீபகாலமாகச் சில புது மாதிரியான பத்திரிகைகளும் புத்தகங்களும் தமிழ் நாட்டில் உலாவுகின்றன. பெண்மக்களை மிகக் கேவலமான முறையில் நிழற்படங்களாக எடுத்து அவற்றைப் புத்தகம் அல்லது பத்திரிகைகளின் முகப்பில் அச்சிட்டு, உள்ளே பெண்மை பற்றிய பச்சையான வர்ணனைகளை நிரப்பி வெளியிடுகின்றனர். இம்மாதிரிப் பத்திரிகைகளையும் புத்தகங்களையுமே தமிழ் மக்கள் அதிலும் என்போன்ற இளைஞர்கள் அதிக அளவில் ஆதரிக்கிறார்கள் என்றும் தெரிகிறது. தமிழ் இலக்கிய உலகில் இது மிகவும் வருந்தத்தக்க விஷயம் மட்டுமன்றிப் பயங்கரமான விஷயமுங்கூட.

இந்த மனநிலையில் இளைஞர் சமுதாயத்தை விட்டு வைப்பதானது எதிர்கால உலகத்துக்கு மிகவும் ஆபத்தை விளைவிக்கும். உலக நாடுகள் அனைத்தும், கல்வியும், கலையும் எத்தனையோ வழிகளில் மறுமலர்ச்சி அடைந்து வரும் புதுமலர்ச்சி அடைந்து வரும் இன்றைய உலகில் பரம்பரையாகக் கலையில் சிறந்த நம் தமிழ்நாடு கலைத்துறையில் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆபாச எண்ணங்களை அறிவுறுத்துவதால் நாம் ஆயாசப்படக்கூடாது. இனியாகிலும் இளைஞர்களாகிய அறிஞர்கள் பண்டைத் தமிழ் நாட்டின் பண்பை நிலைநாட்டி, மனித தருமத்தில் நிகழாது, அறம் ஓங்கி வளம்செழித்து. வண்மை போற்றும் தீரர்களாக வாழ்வீர்களாக.

ஜேய்ஹிந்த்!

அமரக்கவி

சி. பி. ராயன், வள்ளுவர் குருகுலம், தாம்பரம் P. O. சென்னை.

செத்துக்கிடந்த தமிழருக்கு புத்துயிர் அளித்த கவியை என்னென்று அழைப்பது? தமிழ் நாட்டில் வீரக்கனல் எழுப்பிய வெற்றி வீராங்கனை என்னென்று அழைப்பது? நமது நரம்பில் சக்தி ஏற்றிய சக்தி பித்தனை என்னென்று அழைப்பது? பழம் பொய்களை வெட்டி வீழ்த்தி புதிய தமிழ் நாடாக ஆக்கிய வீராங்கனை என்னென்று அழைப்பது? கலை, கல்வி, நாட்டுப்பற்று அனைத்திலும் புத்தொளி பாய்ச்சிய கவி கதிரவனை என்னென்று அழைப்பது? கலியுகம் அழிந்து புதுயுகம் பூத்து மலரும்படிச் செய்த கவியை என்னென்று அழைப்பது?

நமக்குள் ஒருவன் நல்லறிவு பெறுகிறான்; நல்லதையே செய்து தீயதை விலக்கி வாழ்கிறான்; மக்களிடத்தில் காணப்படும் சாதாரணக் குறைகளை மேற்கொள்ளாது தன் வாழ்க்கையில் உயருகிறான்; தான் உயர்வதுடனில்லாது மற்றவர்களுக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறான்; இப்படி வாழ வேண்டிய முறையிலே வாழ்ந்து, பிறரையும் வாழ்விக்க வந்த அந்த உத்தம புருஷன் யார்? அவனன்றோ பாரதியார்.

தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பாரதியாரின் பாடல்களைப் பாடி மகிழ வேண்டும்; உலகெங்கும் பல மொழிகளில் தமிழ் மொழியைப் பரப்பவேண்டும்; எங்கள் பாரதியார், எங்கள் தமிழ்நாடு என்று பெருமையடையும்படிச் செய்யவேண்டும்.

சீக்கியர் கிரந்த சாஹேபை மதிப்பது போலவும்; கிறிஸ்தவர் பைபிளை மதிப்பது போலவும்; முகமதியர் குரானை மதிப்பது போலவும்; வங்காளிகள் தாகூர் நூலை மதிப்பது போல்வும்; ஆங்கிலேயர்கள் ஷேக்ஸ்பியர் நூலை மதிப்பது போலவும்; வட இந்தியர்கள் துளசி தாஸரை மதிப்பது போலவும்; நம் கவிமணியான பாரதியாரின் நூலை நாம் மதித்துப் போற்ற வேண்டும்.

தமிழ் நாட்டு மக்களே! பாரதியாரை சாமானியமான தேசிய கவி என்று எண்ணாதீர்கள். புதிய தமிழ் நாட்டின் தீர்க்க தரிசி என்று போற்றுங்கள் பாரதியாரை மறந்து தமிழ் நாடு இருக்க முடியுமா? ஹோமர் என்ற கிரேக்க கவி கண்ணிழந்து உடல் தளர்ந்து உள்ளம் சோர்ந்து தள்ளாடித் தத்தளித்த போது ஏனென்று கேட்பாரின்றி இறந்தார். இறந்த பின் சிறந்து விளங்கினார். அவர் வாக்கு மக்களுக்கு வேத வாக்காக இருந்தது அதைப்போல் நமது பாரதியார் உயிர் உள்ள மட்டும் வருந்தி மனம் கரைந்து வறுமைச் சேற்றில் உழன்று இறந்த பின் இன்று மக்களின் மனதில் அழியா இடம் பெற்று விட்டார்.

அன்று வறுமையால் வாடும் பொழுது காலம் அவரைப் பார்த்தது; பகைத்தது; நகைத்தது; வெறுத்தது அநீதி என்ற நஞ்சைக் கொடுத்தது இச்சமூகம். அதையும் கவியார் புன்னகையோடு உண்டு புன்னகையோடு இறந்து மக்களின் மனதில் சாகா வரம் பெற்றுவிட்டார்.

தமிழ் திருநாடு தன்னைப்பெற்ற —எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா, என்று ஒவ்வொரு தமிழ்த்தாயும் தன் குழந்தைக்கு முலைப்பாலுடன் தமிழன்புப் பாலையும் ஊட்டும் காலம் வர வேண்டும். உலகிலுள்ள அறிவுச் செல்வம் கலைச்செல்வம் தொழிற் செல்வம், வாணிபச் செல்வம் வீரச்செல்வமெல்லாம் படைத்து தமிழ்நாடு வெற்றிச் செல்வமாக விளங்கும் காலம் வரவேண்டும். எட்டுதிக்கும் சென்று எல்லா தமிழ்கலைச் செல்வம் பரப்பும் முயற்சிக் கனல் உங்களது உள்ளத்தில் உரம்பெற வேண்டும். இன்று என் மனம் துடிக்கிறது; தமிழர் நிலையைக் கண்டு படபடக்கிறது; இன்று தமிழர் தமிழை புறக்கணித்து விட்டார்கள். தமிழர் என்றால் நெத்தாலியிலும், கண்டியிலும் ஆப்ரிக்காவிலும், பர்மாவிலும் வேலை செய்யும் கூலிகளாகவே கருதுகிறார்கள் தமிழர் கூட்டம் வீரர் கூட்டமாய்; அறிவுச் செல்வர் கூட்டமாய்; கலைமணிகள் கூட்டமாய் ஓங்கி வளம்பெற வேண்டும். இது தான் என் மனத்துடிப்பு.

இந்த துடிப்பு தமிழர்கள் மனதில் துடிக்கட்டும் தமிழர் உள்ளத்தில் உரம் பெரட்டும் ஏன்? இந்நாட்டில் வசிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் ஒரே தமிழ்த் துடிப்பாகி மின்சார வேகத்தில் பரவவேண்டும். ஏ அன்புத் தமிழா! நிமர்ந்து நில் உன்பார்வையில் தமிழப் பகைவரை நடுங்கச் செய்! உன் அன்பர்களை மகிழச் செய்! உன் உரிமையை விட்டுக் கொடுக்காதே உன் பெருமையை மறக்காதே! தன் மதிப்பு, தன்னம்பிக்கை, தன்னுதவி, தன்னடக்கம் இவைகள் யாவும் தமிழர் வாழ்விற்கு ஜீவ நாடிகள்.

பெண்மணிகாள்! உங்கள் விடுதலைக்காக பாடுபட்ட பாரதியாருக்கு என்ன கைமாறு செய்யப்போகிறீர்கள்? நாள் தோறும் வீட்டில் பாரதி பாடல்களை காலை, மாலையில் பாடுங்கள்; அந்திவேளையில் விளக்கேற்றி பாரதியாரின் பக்தி பாடல்களைப் பாடுங்கள்; மணப் பெண்ணுக்கு அக்கவியின் பாடல்களை அன்பின் காணிக்கையாக கொடுங்கள்; தாய்மார்களே! உங்கள் குழந்தைகளுக்கு பாரதி பாடல்களைச் சொல்லித்தருவது முதல் படியாக கொள்ளுங்கள்; நாள் கிழமை எதுவந்தாலும் பாரதி பாடல்களை குயிலைப்போல் பாடி மயிலைப்போல் ஆடி மனங் குளிருங்கள்.

பாரதியார் ஒரு கவி மின்சாரம். அந்த மின்சாரமே புதிய தமிழ் உலகை இயக்கும் சக்தி. பாரதியாரின் பாடல்கள் நமது சமுதாய சக்தியை எழுப்பி, புதிய வாழ்வைத் தந்த மின்சா

ரம். தமிழர்காள்! அதோ தமிழ்த்தாயின் பகைப் பாடல்கள் அட்டூழியம் செய்கின்றன. தமிழ்த்தாயின் தலைமாட்டிலும், கால்மாட்டிலும் பகைப்படைகள் சூழ்ந்து கொக்கரிக்கின்றன. பொறாமைப்படை; ஆணவத்திமிர் படைத்த சுயநலப்படை; உண்டகம் வீட்டிற்கு இரண்டகம் செய்யும் வஞ்சகப்படை; தமிழ்த்தாயின் இரத்தத்தை உறிஞ்சும் அன்னிய மோகப்படை; கோள் சொல்லி குடியை கெடுக்கும் படைகள் எல்லாம் வந்து மோதுகின்றன. தமிழ் வீரர்களே! தயக்கம் ஏன்? வாளும், வேலும் மட்டும் போதாது. ஒற்றுமை என்ற சஞ்சீவியை அணிந்து வாருங்கள், அப்பொழுதுதான் உறுதியான வெற்றி கிட்டும்.

அதோ வருகிறாள்! புதுயுக சக்தி; வீரகனல் விழி; மோகன புன்னகை; இளமையின் வடிவம்; ஆயிரம் கலை அழகி; அறிவு, ஆற்றல், அஞ்சாமை, ஒற்றுமை, விடுதலை இவைகளைக் கொடுத்து தமிழ் நாட்டு மக்களை புதுப்பிக்க வந்தாள். அப்பொழுது வா என்பார் இல்லை; அறிவார் இல்லை; உணர்வாரும் இல்லை; இப்படியும் மனிதர்கள் உண்டா? ச்சி! என்ன தமிழ்நாடு என்று செம்பஞ்சு போன்ற கன்னத்தில் கை வைத்து திகைத்து நின்றாள் கவிச்சக்தி. உறங்கிக் கிடக்கும் தமிழ் நாட்டை எழுப்பவேண்டும். உணர்ச்சிக் கனலை மூட்ட வேண்டும்; ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும்; புதுயுகம் பூத்து மலரவேண்டும்; தமிழ்நாடு தமிழ் பூஞ்சோலையாக திகழ வேண்டும் என்று கவிச்சக்தி கூறினாள். யாரது? நீயா? வந்தாயா? மகனே கவிக்குயிலே இன்னமுதே வா! இளைய பாரதத்தினாய் வா? இனி அச்சமில்லை; அழிவு இல்லை; இன்னல் இல்லை; இருள் இல்லை; கவலை இல்லை; எனக்கூறி கவிசக்திப் பெற்ற பாரதியார் இன்று சாகா வரம் பெற்றுவிட்டார். தமிழன்னையே! அக் கவியை முத்தமிட்டு ஆசிர்வதிப்பாயாக!

பாரதியார் மேலறிவுப்பெற்றார். நாட்டின் நிலையைக் கண்டார்; மக்களின் நிலைமை தாழ்ந்ததிற்கு உரிய குறைகளை உணர்ந்தார். உணர்ந்த அளவிலே மனம் துடித்தார்; தமிழ் மக்களை தட்டி எழுப்பினார்; சுதந்திரக் கனலை மூட்டினார். அடிமைச்சங்கிலியை உடைத்தெறிந்து மக்களுக்கு ஆண்மையை அளித்தார்; நம்மையும் வாழவைத்தார்; தேனினும் இனிமையான தமிழ்ச் சுவையை நமக்கு ஊட்டினார்.

உலகில் தாழ்விலாத தமிழ் இனம் நமது; உலகத்தில் மிக மேம்பட்ட தமிழ் இனம் நமது; உழைப்பை உயர்வாக கருதும் தமிழ் இனம் நமது; நமது தமிழ் இனத்தில் தோன்றும், வறுமையும், சிறுமையும் விரட்டியடித்து "செந்தமிழ் வெல்க" என்ற சிங்க நாதத்துடன் நம் தமிழ் நாட்டின் மேன்மையை உயர்த்த வேண்டும்.

இளைஞர்காள்! அறிவு, அன்பு, ஆற்றல், பிறர் நலம் யாவும்

ஆசிரியர் சாசனம்

முகவுரை

அகில இந்திய ஆசிரியர் சமாஜத்தின் கொள்கை, இந்தியாவின் எந்த பாகத்திலுமுள்ள எல்லா வித—பிரைமரி, செக்கண்டரி, உயர்தர, ஸ்பெஷல் — ஆசிரியர்களின் நன்மைகளைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு நாட்டில் உரிமையான ஸ்தானத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என இருப்பதாலும்,

இந்த கொள்கையை, பொது ஜனங்களும் சர்க்காரும் சேர்ந்து ஆசிரியர்களுக்கு சில முக்கியமான உரிமைகளையும் பொறுப்புகளையும் அளித்தாலன்றி அடைய முடியாததாயிருப்பதாலும்,

இங்கு குறிப்பிட்டுள்ள உரிமைகளும் பொறுப்புக்களும் ஆசிரியர்களுக்குத் தேவை என்றும், அவைகளை சமாதான முறைகளினால் அடைய முயற்சிப்பதை முதல் கடமையாகக் கொண்டிருப்பதாகவும், அகில இந்திய ஆசிரியர் சம்மேளனம் உறுதி கூறுகிறது.

உரிமைகள்

1. ஒவ்வொரு ஆசிரியரும் தேசத் தொண்டர் என்பதை பொது மக்களும் சர்க்காரும் உணரவேண்டும்.

2. ஒவ்வொரு ஆசிரியரும் நியாயமான ஜீவனம் நடத்தப் போதுமான ஊதியம் பெற வேண்டும்.

3. ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தங்கள் உத்தியோகத்தில் ஸ்திரமாயிருக்க உரிமை உண்டு.

4. ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தங்களுடைய வியாதியிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும், வயது முதிர்ந்த காலத்தில் காப்பாற்றப்படவும் உரிமை உண்டு.

5 ஒவ்வொரு ஆசிரியரும், ஜாதி, மதம் முதலிய வித்தியாசமில்லாமல், சம்பளம், உத்தியோக உயர்வு விஷயங்களில் சமதிருஷ்டியோடு நடத்தப்பட உரிமை உண்டு.

6. ஆசிரியர்களுக்கு, தங்கள் உபயோகத்தில் மேன்மையடைய வேண்டி நியாயமான முறையில் சங்கங்களில் சேரவும், தங்களுடைய அபிப்பிராயங்களை சுயேச்சையாக வெளியிட்டுப் பேசவும் உரிமை இருக்கவேண்டும்.

7. ஒவ்வொரு ஆசிரியருக்கும், கல்வி, சமூகம் தேசியம் சம்பந்தப்பட்ட நியாயமான பொதுக் காரியங்களில் ஈடுபட உரிமையுண்டு.

விரிந்து வளர்ந்து வைரமாக வேண்டும்.

பாரதியார் மறைந்து போகவில்லை. இதோ நமக்குள், நமக்கு முன், நமது உள்ளத்தில் அழியா இடம் பெற்றுவிட்டார். தமிழ் உள்ள மட்டும்-தமிழர் உள்ள மட்டும்-தமிழகம் உள்ள மட்டும் பாரதியார் சாகா வரம் பெற்று இருக்கிறார். ஆகவே அவர் ஒரு "அமரக்கவி"

8. ஒவ்வொரு ஆசிரியருக்கும், தங்கள் முக்கியமான கடமைகளுக்கு விரோதமில்லாமலும், தங்கள் கவுரவத்திற்கு உகந்தவாறும், ஓய்வு நேரங்களில் வேறு சில தொழில்கள் மூலம் அதிக வருமானம் சம்பாதிக்க உரிமையுண்டு.

9. ஒவ்வொரு ஆசிரியரும், தங்கள் வேலையை மிகத் திறம்படச் செய்ய வேண்டி பயிற்சியளிக்கப்பட உரிமையுண்டு.

10. ஒவ்வொரு ஆசிரியருக்கும், கல்வி சம்பந்தமாகவும், தங்கள் யோக்யதாம்சங்களை அபிவிருத்தி செய்துக்கொள்ளவும், வேண்டிய பிரயாண வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

11. கல்வி சம்பந்தப்பட்ட கொள்கைகளை உருவாக்கவும், எல்லாவித பாடசாலைகளின் நிர்வாகத் துறையில்—சர்க்கார் பாடசாலைகள், பிரைவேட் பாடசாலைகள், யூனிவெர்ஸிடி பாடசாலைகள்—தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அனுப்ப ஆசிரியர்களுக்கு உரிமை அளிக்கப்படவேண்டும்; அப்படிப்பட்ட உரிமையைச் சட்ட மூலமாகவாவது அல்லது வேறு எந்த முறையிலாவது கிடைக்கும்படி செய்ய வேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

12. (a) ஒவ்வொரு ஆசிரியருக்கும், தங்களுடைய கிரேடு தாழ்த்தப்படல், வேலையிலிருந்து நீக்கம், உத்தியோக உயர்வில் பாரபட்சம், அல்லது ஆள் குறைப்பு முதலிய விஷயங்களில் முதலாளியையும் தொழிலாளியையும் கட்டுப்படுத்தும் தீர்மானமான தீர்ப்பை அளிக்கக்கூடிய பாரபட்சமில்லாத நியாய சபை ஒன்றுக்கு அப்பீல் செய்து கொள்ள உரிமையுண்டு; அப்படிப்பட்ட நியாயசபையை சட்டபூர்வமாக நிறுவவேண்டியது சர்க்காரின் கடமையாகும்.

(b) உள்ளூர் அல்லது மாகாண அல்லது தேசிய சம்பந்தமான குழப்பம் ஏற்படும் காலங்களில், இவர்கள் தங்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளாமலிருந்தார்களேயானல், ஆசிரியரும் பாடசாலையும் உபத்திரவப் படுத்தப்படாமலிருக்க வேண்டும்.

பொறுப்புகள்

1. ஒவ்வொரு ஆசிரியரும், பள்ளிக்கூடத்தில் வகுக்கப்பட்ட பாட திட்டப்படி, தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உண்மையான முறையில் பாடம் சொல்லிக்கொடுப்பது தவிர, அவர்கள் உடலுறுதியுள்ளவர்களாகவும், மனச்சுத்தமுள்ளவர்களாகவும், உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாகவும், அச்சமில்லாதவர்களாகவும், தாங்களாகவே தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் ஆற்றலுள்ளவர்களாகவும் ஆகுமாறு அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு மாணுக்கனும் சமூக வாழ்க்கைக்குத் தக்கபடி திருந்தக் கூடியவர்கள் எனக்கருதி அவர்களை சமூகத் தொண்டில் ஈடுபடும்படியான வகையில் சீர்திருத்திக் கொடுக்கவேண்டும்.

3. ஒவ்வொரு ஆசிரியரும், தான் போதிக்கும் உத்தமக் கொள்கைகளுக்கும், தான் தினந்தோறும் தன் மாணவர்களுக்கெதிரில் நடந்துகொள்ளும் தன்மைக்கும் வித்தியாசமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்

4. ஒவ்வொரு ஆசிரியரும், தற்கால சமூகத்தில் ஒருவருக்கொருவர் போட்டியிடும் தன்மையைக் கண்டிப்பதோடு, சிறுவர்கள் மனதில் கூட்டுறவு சமூக சேவை முதலியவற்றின் முறைகளைப் புகுத்துவதற்கு நல்ல முயற்சி செய்யவேண்டும்.

5. ஒவ்வொரு ஆசிரியரும், ஜாதி, நிறம் முதலிய வேற்றுமை பாராட்டாமல் எல்லா ஜாதியாரிடத்திலும், ஒற்றுமையோடும், சகோதரபாவத்தோடும் நடந்துகொள்ளும் தன்மையில் தேசத்துச் சிறுவர்களை பயிற்றுவிக்கும் கடமையை முதலாவதாகக் கொள்ளவேண்டும்.

6. ஒவ்வொரு ஆசிரியரும், தொழிலின் பெருமையை மேற்கொண்டவர்களாகவும், அதை வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களாகவும் இருப்பதோடு, தங்கள் மாணவர்களையும் அதே மாதிரி பயிலுவிக்கவும் வேண்டும்.

7. ஒவ்வொரு ஆசிரியரும் தேசத்தொண்டரின் உத்தம குணங்களுடையவராகவும், தங்கள் ஆசிரியத் தொழிலில் பாரபட்சமில்லாமல் சமமான நோக்கங்கள் கொண்டவராகவும் இருக்கவேண்டும்.

8. ஒவ்வொரு ஆசிரியரும், யுத்த மனப்பான்மையற்றவராகவும், உலக நேசப்பான்மை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

9. ஒவ்வொரு ஆசிரியரும், தன் வாழ்நாள் பூராவும் கற்க வேண்டியவராகவும், தன் உத்தியோகத்திற்கு வேண்டியவற்றை மேல்மேலும் விருத்தி செய்துகொண்டும், எல்லாவிதத்திலும் தன்னை மேன்மைப் படுத்தும்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வேண்டிய அறிவை சேகரித்துக்கொள்ளவும் வேண்டும்.

10. ஒவ்வொரு ஆசிரியரும், மனித வர்க்கத்தின் உயர்விலும் சுயேச்சையிலும் சிரத்தையுள்ளவராயும், நியாயமான சமாதான முறையில் தாழ்த்தப்பட்டவரையும் குழந்தைகளையும் மேன்மைப்படுத்த ஊக்கங்கொண்டவராயும் இருக்கவேண்டும்.

11. ஒவ்வொரு ஆசிரியரும் தன் எண்ணங்களை சுயேச்சையாக வெளியிடுவதற்கு உரிமை கொள்வதோடு பிறருக்கும் அவ்வுரிமையை அளிக்க வேண்டும்.

12. ஒவ்வொரு ஆசிரியரும் நம் தேசத்தில் கலந்துள்ள பல நாட்டு உத்தமப் பண்புகளை பாராட்டி வளர்ப்பதோடு, அவைகளிலிருந்து புதிதப் பண்புகளை ஆராய்ந்தெடுத்து, நம் தேசத்திற்கும் பொதுவாக மனித வர்க்கத்திற்கும் உபதேசிக்க வேண்டும்.

(பக்கம் 17ல் பார்க்கவும்)

 Registered No. M. 5171

விவசாயக் கல்வி

இருபத்தைந்து ஹைஸ்கூல்களில் பரீட்சார்த்தமாக மாணவர்களுக்கு விவசாயக் கல்வியை போதிக்கப் போவதாக மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் கூறுகிறார். யோசனை நல்லதுதான். இதைப்பற்றிய உத்தேச விவரங்களை ஒரு அறிக்கையாக சர்க்கார் வெளியிடுவது விரும்பத்தக்கது. செகண்டரி கல்வித் திட்டத்தை தொழில் அடிப்படையில் மாற்றியமைக்க வேண்டும் என்றும் அதற்கு யோசனை கூற ஒரு கமிட்டி நியமிக்கப்படுமென்றும் பல வாரங்களுக்கு முன்னமே அறிவிக்கப்பட்டது. அத்தகைய சீர்திருத்த ஏற்பாட்டின் பகுதியாக மேல் வகுப்புகளில் விவசாயக் கல்வியை போதிக்கப் போகிறார்களா? அல்லது இப்போதைய திட்டத்தின்படியே இஷ்ட பாடமாக விவசாயத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று விதி செய்யப் போகிறார்களா என்பது தெரியவில்லை. பயிர்த் தொழில் என்பது என்னவென்றே தெரியாமல் டவுன்களில் ஏராளமான பிள்ளைகள் வளருகிறார்கள். மேல் படிவத்தினரையாவது விவசாய காலங்களில் கிராமங்களுக்கு, உல்லாசப் பிரயாண திட்டப் பகுதியாக, அனுப்பி வைப்பது பயனுள்ளதாக இருக்கும். இதைப்பற்றியும் கல்வித்துறை பிரமுகர்களும் சர்க்காரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விவசாயக் கல்வியை ஹைஸ்கூல்களின் மேல் வகுப்புகளில் சொல்லித் தருவது நல்லதா? அல்லது, மூன்றாவது படிவம் வரை போதிப்பது சிறந்ததா? இதுவும் ஆராய்ந்து முடிவு செய்யப்படவேண்டிய விஷயம். உத்தரப் பிரதேசத்தில் 25 ஜில்லாக்களில் “ஜூனியர் ஹைஸ்கூல்”களில் (முதல் மூன்று படிவங்களில்) சுமார் இரண்டாயிரத்து நானூறு பள்ளிக்கூடங்களில் விவசாயக் கல்வி கட்டாயமாக போதிக்கப்படுவதாக ஒரு செய்தி கூறுகிறது. இதற்காக ஒவ்வொரு ஸ்கூலுக்கும் 10 ஏக்கரா நிலம் தந்திருக்கிறார்களாம். இந்த திட்டம் அங்கே எப்படி வேலை செய்கிறது என்பதை நமது சர்க்கார் கண்டறிய வேண்டும். நமது ராஜ்யத்தில் அந்தமாதிரி தருவதற்கு நிலமில்லை. இரண்டாவதாக, பள்ளிக்கூடத்துப் பண்ணை என்று வைப்பது கட்டுப்படியாகும் என்று தோன்றவில்லை. மூன்றாவதாக இங்கே அப்படி செய்வதற்கு அவசியமும் இல்லை. சிறிய பட்டணங்களிலும் கிராமங்களிலும் வசிக்கும் எல்லா மாணவர்களுக்குமே விவசாயக் கல்வியை இங்கு வெற்றிகரமாகப் போதிக்கமுடியும். ஒவ்வொரு பண்ணைக்கும் நான்கைந்து மாணவர்கள் என்று பிரித்துவிட்டு, அனுபவ அறிவும் வேலைப் பழக்கமும் கிடைக்கச் செய்வது சுலபம். அம்மாதிரி துணைபுரியும் பண்ணைகளுக்கு சில அதிகப்படி வசதிகளை சர்க்கார் செய்து தரலாம். இதைப்பற்றியும் சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கருதுகிறோம்.

Edited and Published by A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint Street, Madras-1.